**DEPOSITION OF WITNESS**
(Chapter XXIII Code of Criminal Procedure)
------------
**II ADDITIONAL DISTRICT AND SESSIONS JUDGE, SALEM.**

**Sessions Case No. 25/2022**

Deposition of witness for : PW12

Name : பன்னீர்செல்வம்

Father's / Husband Name : சிவப்பிரகாசம்

Village :

Taluk :

Caste :

Calling :

Religion :

Age :

Solemnly affirmed in accordance with the provisions of Law and recording the Deposition of the Witness on 27th day of November 2024.

27-11-2024

**1 முதல் 5 வரையிலான எதிரிகள் ஆஜர். 6 வது எதிரி தரப்பில் மனு தாக்கல் செய்யப்பட்டு மனு அனுமதிக்கப்பட்டது.**

**முதல் விசாரணை:-**

நான் எடப்பாடி தாலுக்கா, தங்காயூர் கிராமம், மேல் தங்காயூரில் குடியிருந்து வருகிறேன். நான் வெல்டிங் வேலை செய்து வருகிறேன். ஆஜர் எதிரிகளை எனக்கு தெரியாது. இந்த வழக்கு சம்மந்தமாக எனக்கு ஒன்றும் தெரியாது. போலிசார் என்னை விசாரிக்கவில்லை.

(அரசு தரப்பில், சாட்சியை பிறழ் சாட்சியாக அனுமதி கோரியதன் பேரில், சாட்சி பிறழ்சாட்சியாக கருதி அரசுத்தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டார்.)

<u>அரசு தரப்பில் குறுக்கு விசாரணை</u>

கடந்த 03.03.2021ம் தேதி மாலை 6.00 மணிக்கு சுமாருக்கு நான் ஹெமிக்கல் பிரிவில் இருந்தபோது எங்கள் ஊரை சேர்ந்த சதீஸ்குமார்(A3) அவரது பைக்கில் மாவிலிபாளையம் பிரிவில் வந்து நின்று கொண்டிருந்தார் என்றும், எங்கள் ஊரை சேர்ந்த பூபதியுடன் இருக்கும் பிரவீன்குமார் என்பவர் TN 52 L 8433 யாமஹா இரு சக்கர வாகனத்தில் கொஞ்ச நேரத்தில் அங்கு வந்தார் என்றும், அப்போது சக்தி, பிரகாஷ் ஆகிய இருவருடன் நடந்த வந்தார்கள் என்றும், அப்போது சக்தி கையில் பம்பு வைத்திருந்தார் என்றும், மேற்படி சக்தியும், பிரகாஷ்ராஜ், பிரவீன்குமார் இருசக்கர வாகனத்தில் மாவிளிபாளையம் நோக்கி சென்றார்கள் என்றும், பிறகு கொஞ்ச நேரத்தில் சதீஸ்குமார் திரும்ப வந்துவிட்டார் என்றும், பிறகு அன்று இரவு 9.30 மணியளவில் நான் வீட்டிற்கு கிளம்பி கொண்டிருக்கும் போது பிரவீன், சக்தி, பிரகாஷ்ராஜ் ஆகிய மூவரும் பைக்கில் திரும்ப வேகமாக கொங்காணபுரம் நோக்கி சென்றார்கள் என்றும் மேற்படி நடந்தவற்றை நான் நேரில் பார்த்தேன் என்றும், அதன் பிறகு கேட்டு தெரிந்த நாச்சிமுத்து மகன் சேகர் (எ) ராமசாமியை அனைவரும் சேர்ந்து கொலை செய்துவிட்டதாக தெரிந்து கொண்டேன் என்றும், அது சம்மந்தமாக போலிசார் என்னை விசாரித்தார்கள் என்றும், நான் நடந்ததை போலிசாரிடம் சொன்னேன் என்று சொல்லிவிட்டு, தற்போது எதிரிகளுக்கு

சாதகமாக உண்மைக்கு மாறாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

எதிரிகளின் வழக்கறிஞர் குறுக்கு விசாரணை இல்லை என்று தெரிவித்தார்.

ஒம்/– A.M. ரவி,
இரண்டாவது கூடுதல் மாவட்ட நீதிபதி,
சேலம்.